





We Shine Academy™

guiding you to get through

# நடப்பு நிகழ்வுகள்

# (CURRENT AFFAIRS)

## மார்ச் - 2019

*We Are Here..!! To Guide You..!!*








# We Shine Study Circle

# TNPSC

## நடப்பு நிகழ்வுகள்

## (Current Affairs)

## மார்ச் - 20.03.2019

We Shine Academy™
guiding you to get through


Main Office @

**Weshine Study Circle**
Chromepet, Chennai
Phone: 8939144344, 8939244344

Branch Office @
**Weshine Study Circle**

Plot No: 47/60, "AK" Block,
7th Main Road, Anna Nagar
Chennai, Tamil Nadu – 600 040.

3rd Floor, West Wing, Gokul Arcarde,
No.2, Sardar Patel Road, Adyar
Chennai, Tamil Nadu – 600 020.

https://weshineacademy.com

# பொருளடக்கம்

- இந்திய நிகழ்வுகள்
- உலக நிகழ்வுகள்
- விளையாட்டு நிகழ்வுகள்
- அறிவியல் & தொழில்நுட்பம்
- நியமனங்கள்











# இந்திய நிகழ்வுகள்

- மக்களிடையே டிஜிட்டல் முறையில் **தேர்தல் கல்வியறிவை மேம்படுத்துவதற்கான** முதல் முயற்சியாக, **அசாம் மாநிலம்** பொதுசேவை மையம் (Common Service Center) **"i-help"** என்ற திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.

- **இந்தியா மற்றும் ஜப்பான்** நாடுகளுக்கிடையேயான **மூன்றாவது பேரிடர் குறைப்பு மீதான கலந்தாய்வு கூட்டம் புதுடெல்லியில்** நடைபெற்றது.
    - இவ்விரு நாடுகளுக்கிடையே **பேரிடர் குறைப்பு மீதான ஒப்பந்தம்** (DRR – Disaster Risk Reduction) **2017 செப்டம்பரில்** கையெழுத்தானது.
    - முதல் பேரிடர் ஆபத்து குறைப்பு கலந்தாய்வு கூட்டம் **புதுடெல்லியில் மார்ச் 2018ல்** நடைபெற்றது. 2வது பேரிடர் ஆபத்து குறைப்பு கலந்தாய்வு கூட்டம் ஜப்பானில் அக்டோபர் 2018ல் நடைபெற்றது.

- **இந்திய இராணுவம் மற்றும் மியான்மர்** இராணுவம் ஆகியவை இணைந்து, கலாதான் பல்முனைய போக்குவரத்து திட்டத்திற்கு அச்சுறுத்தல் கொடுத்து வந்த கிளர்ச்சி குழுக்களின் முகாம்களை மியான்மரில் அழித்துள்ளது.
    - இந்த நடவடிக்கையானது **"சன்ரைஸ் நடவடிக்கை"** (Operation Sunrise) எனப் பெயரிடப்பட்டுள்ளது.
    - **கலாதான் பல்முனைய போக்குவரத்து திட்டமானது** வடகிழக்கு இந்தியா மற்றும் மியான்மரை இணைப்பதற்கான இரு நாடுகளின் முக்கியமான திட்டமாகும்.

# உலக நிகழ்வுகள்

- **நைரோபியில் நடைபெற்ற ஐ.நாவின் சுற்றுச்சூழல் குழுமத்தின்** (UN-Environment Agency) கூடுகையில் **இந்தியாவானது 2030ம் ஆண்டில் நெகிழிப் பயன்பாட்டை நீக்கவும் நைட்ரஜன் மாசுபாடு** குறித்த **விழிப்புணர்வை** ஏற்படுத்தும் தீர்மானத்தை முன்வைத்துள்ளது.
    - மேலும் நெகிழி பயன்பாட்டால் சுற்றுச்சூழலில் ஏற்படும் விளைவுகள் குறித்து இம்மாநாட்டில் விளக்கப்பட்டது.

## விளையாட்டு நிகழ்வுகள்

- **2020ல்** ஜப்பானில் நடைபெற உள்ள டோக்கியோ ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்கும் முதல் **இந்திய தடகள வீரராக K.T. இப்ரான்** என்பவர் **தேர்வு** செய்யப்பட்டுள்ளார்.
    - இவர் கேரளா மாநிலத்தைச் சேர்ந்தவர்.

- ஹாங்காங்கில் நடைபெற்ற ஆசிய **இளையோர் தடகள சாம்பியன்ஷிப் போட்டியின்** மகளிருக்கான நீளம் தாண்டுதல் போட்டியில் தமிழ்நாட்டைச் சேர்ந்த **"தபித்தா"** தங்கம் வென்றுள்ளார்.
    - இவர் இப்போட்டியில் பெறும் இரண்டாவது தங்கப்பதக்கமாகும்.
    - இதற்கு முன் **100மீட்டர் தடை தாண்டும் போட்டியில்** தனது முதல் தங்கப் பதக்கத்தை வென்றுள்ளார்.

## அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்

- இந்திய கடற்படையானது, **"ப்ராஜெக்ட் - 75"**-ன் கீழ் தயாரிக்கப்பட்ட ஸ்கார்பியன் வகுப்பின் **2வது நீர்மூழ்கி கப்பலான "INS – கந்தேரியை"** வரும் மே மாதத்தில் கடற்படையில் இணைக்க உள்ளது.
    - டீசல் - மின்னாற்றல் மூலம் இயங்கும் இந்த நீர்மூழ்கி கப்பல் ஆனது பிரெஞ்சு ஆற்றல் நிறுவனமான DCNS-ஆல் வடிவமைக்கப்பட்டு மும்பையில் தயாரிக்கப்பட்டது.

## நியமனங்கள்

- கோவாவின் புதிய முதலமைச்சராக **"பிரமோத் சாவந்த்"** என்பவர் நியமிக்கப்பட்டுள்ளார்.
    - இவர் கோவா மாநிலத்தின் **13வது** முதலமைச்சராக பதவியேற்கிறார்.
    - இவர் ஆளுநரால் இந்திய அரசியலமைப்பு சரத்து 164ன் படி நியமிக்கப்பட்டுள்ளார்.
    - கோவா இந்தியாவின் **25வது மாநிலமாக 1987ம்** ஆண்டு சேர்ந்தது. இந்தியாவின் ஒரு பகுதியாக **1961ல்** இணைந்தது குறிப்பிடத்தக்கது.